மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22 ஆயிரம் கடைகளில் ஒரு ஆயிரம் கடைகளை தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நடத்தி வருகிறது. அங்கே சற்று கூடுதலாக சம்பளம் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல மீதம் இருக்கிற கூட்டுறவுக் கடைகளில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நடத்துகின்ற கடைகள்தான் பெரும்பாலும் இருக்கின்றன. கொஞ்சம் கடைகளை, சில ஆயிரம் கடைகளை ஒல்சேல் ஸ்டோர்ஸ் மொத்த விற்பனை பண்டக சாலைகள் நடத்துகின்றன. அங்கே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நடத்துகின்ற கடைகளை விட சற்றுக் கூடுதலாக சம்பளம் வழங்கப்படுகிறது. எல்லோருக்கும் ஒரே மாதிரி சம்பளம் கொடுப்பது என்பது இப்போதைக்கு இயலாத காரியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 375, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

375—

சிமெண்ட் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு முகமூடி வழங்கல்

*12821—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிமெண்ட் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு முகமூடி (Face Mask) வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பொதுவாக சிமெண்ட் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அவர்கள் பணியாற்றுகின்ற தொழிலின் தன்மைக்கு ஏற்ப (Face Mask) வழங்கப்படுகிறது.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் சங்ககிரிக்கு அருகில் உள்ள சங்கர் சிமெண்ட் தொழிற்சாலை, திருச்சி மாவட்டத்திலுள்ள அரியலூரில் அமைந்துள்ள சிமெண்ட் தொழிற்சாலை, காமராஜர் மாவட்டத்தில் அமைந்துள்ள ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை கிய 3 தொழிற்சாலைகளிலும் பணியாற்றும் தொழி

லாளர்கள் மாஸ்க் உபயோகப்படுத்தவில்லை என்பதை கருத்தில் கொண்டு அதை பயன்படுத்த வேண்டுமென்று நிர்வாகத்தை அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழிற்சாலை விதி 61 (ஓ) வின் கீழ் அபாயகரமான தொழிலில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு தொழிலின் தன்மைக்கு ஏற்ப பாதுகாப்புக் கவசங்கள் கொடுக்க ஆணை பிறப்பிக்க தொழிற்சாலை ஆய்வாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, அப்படி அவர்கள் வழங்காமல் இருந்தால் இது குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் அந்த டஸ்ட் மனித உடம்பில் பல நோய்களுக்கு அடிகோலுகிறது. குறிப்பாக ஆரம்பக் கட்டத்தில் Chronic Broncnitis, Bror.chile Asthma, Silicosis என்று ஆரம்பித்து முடிவில் ஒன்று இரண்டு விழுக்காடுகள் Bronchogenic sp.sm ஆகவும், 30 விருந்து 40 சதவீதம் Chronic Tuberculosis ஆகவும் மாறுவதை கருத்தில் கொண்டு தொழிலாளர் நலனில் அக்கறையோடும், பொறுப்புடனும் செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்டதைப் போல் உடல் முழுவதும் மறைக்கும் வண்ணம் கோட்டு, மாஸ்க், கேப், டஸ்ட் ப்ரூப் ஆக கொடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்காகத்தான் 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் இயற்றப்பட்டது. அதிலே தொழிலாளர்களுடைய நல வாழ்வு, பாதுகாக்கும் முறை ஆகியவற்றுக்கான சட்டங்கள், விதிகள் இருக்கின்றன. இச்சட்டத்தின் கீழ் 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் என்ற விதிகளும் இயற்றப்பட்டு உள்ளன. மேற்படி சட்டத்தின் பிரிவு 14-இல் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் தூசுகள் நுகராது இருக்கவும், பணி இடங்களில் தூசுகள் சேராமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும் நிர்வாகத்தினரால் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இது குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.